# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

**செய்திமலர்** **ஜனவரி 2022**

கிறிஸ்துவில் அன்பு சகோதர சகோதரிகளுக்கு

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த ஆண்டுகளில், தமது கிருபையினால் நம்மைக் காத்து வழிநடத்தி வந்த ஆண்டவர் இந்த புதிய ஆண்டிலும் நம்மை தம் கரம்பிடித்து வழிநடத்துவார். வருஷத்தை தம்முடைய நன்மையால் முடிசூட்டும் ஆண்டவர் இந்த ஆண்டில் தமது நன்மையால் தமது ஜனத்தை நிரப்புவார். தமது அளவற்ற கிருபைகளை தமது ஜனங்களுக்கு அருளிச்செய்து அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்துவார். தமது கண்களை தம்மக்கள் மீது வைத்து, தனது ஆலோசனைகளைத் தெரியப்படுத்தி, நடக்க வேண்டிய வழிகளைக் காட்டுவார். பரலோக வாழ்வினை எதிர் நோக்கி, அவருக்காக உண்மையும் உத்தமமுமாக வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகள், இந்த புதிய ஆண்டில், நற்செய்தி அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்யும் பணியில் தங்களை இணைத்துக் கொண்டு, இன்னும் தீவிரமாக செயல்பட தேவன் அறைகூவல் விடுக்கிறார்.

தேவன் நமது ஸ்தாபனத்துக்கு கொடுத்த தரிசனத்தின் பிரகாரமாக 400 திருச்சபைகளை உருவாக்கவும் ஒவ்வொரு திருச்சபைக்கும் 100 விசுவாசக் குடும்பங்களை உருவாக்கவும் 40 தமிழ் ஊழியக் குடும்பங்களை தாங்கவும் 400 சுதேச ஊழியர்களை உருவாக்கவும் ஜெபத்தோடு செயல்பட்டு வருகிறோம். எங்களோடு இணைந்து ஊழியத்தை நிறைவேற்ற விரும்பினால் எங்களை தொடர்பு கொண்டால் உங்களை அழைத்துச் செல்ல எதுவாக இருக்கும்.

நமது தேசத்துக்காகவும் வழிநடத்துகிற தலைவர்களுக்காகவும் இந்த நாட்களிலே ஜெபிப்பது மிகவும் அவசியம் சில மாநிலங்களிலே சுவிசேஷத்துற்கு தடை மற்றும் ஊழியர்கள் துன்பப்படுத்தப் படுகிறதை நாம் செய்திகளிலும் நமக்கு அறிமுகமான ஊழிய ஸ்தாபனங்களின் மூலமாயும் கேள்விப்படுகிறோம் இப்படிப்பட்ட சூழ்நிலை மாறவும் ஊழியர்களின் பாதுகாப்புக்காகவும் நாம் ஜெபிப்பது நம்மேல் விழுந்த கடமை.

தேவ கிருபையினாலே கடந்த மாதத்திலே நீங்கள் அறிந்த வண்ணம் நாம் கட்டி வந்த தேவாலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபைச் செய்தார். அதற்காக ஜெபித்த கொடுத்த அனைவரையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக. ஆலய பிரதிஷ்டை நிகழ்வுகளை பின்வரும் பக்கங்களிலே அச்சிட்டுள்ளோம். ஆதனை கண்டு அந்த ஆலய விசுசாசிகளுக்காகவும் அங்கு ஊழியத்தை நிறைவேற்றி வருகிற நமது ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள்
இந்த புது வருடத்திலே தேவன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் நல்ல சுகத்தையும் பெலத்தையும் இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் தந்து தேவ நாமத்துக்கு மகிமையாக வைப்பாராக!

**பிம்பிரி தேவாலய பிரதிஷ்டை நிகழ்வுகள்**




# புது வருட சிறப்புச் செய்தி

மனுஷனே நியாயஞ்செய்து இரக்கத்தை சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் - மீகா 6:8

வேதம் சொல்லுகிறது தேவனே நீதியுள்ள நியாதிபதி. தேவனால் அபிஷேகிக்கப்பட் தாவீது இராஜா சொல்கிறார் நான் துர்குணத்தில் உருவானேன். ஏன் தாய் என்னைப் பாவத்தில் கர்பந்தரித்தாள என்று அநீதி நிறைந்த இந்த உலகில் உள்ள ஆட்சியாளர்களிடம் ஜனங்கள் இரக்கத்தையும் நீதி நியாயத்தையும் எதிர்பார்க்கிறார்கள் நித்திய ஜீவனுக்கென்று நம்மை அழைத்த தேவன் நம்மில் கீழ்கண்ட காரியங்களை எதிர்பார்க்கிறார்.

## நியாயம் செய்ய வேண்டும்:

இயேசு ஜனங்களுக்கு தேவாலயத்திலே உபதேசம் பண்ணிக்கொணடிருந்த போது விபசாரத்திலே கையும் களவுமாய் பிடிபட்ட ஸ்திரியை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று வேதபாதகரும் பரிசேயரும் சொன்னபோது இயேசு உங்களில் பாவம் இல்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியட்டும் என்றார் அதைக்கேட்ட பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டனர். இயேசு அந்த ஸ்திரியை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை போ இனி பாவம் செய்யாதே என்றார்.

பட்சபாதமில்லாத நீதியுள்ள நியாதிபதியாகிய இயேசு அழைக்கப்பட்ட நம்மிடமும் அத்தகைய நியாயம் செய்யும் குணத்தை எதிர்பார்க்கிறார். இந்த புது வருடத்திலும் நீதியோடும் நியாயத்தோடும் நடந்து தேவ இராஜ்யத்தின் விருத்திக்கென்று பயன்பட தேவன் நமக்கு உதவி செய்வாராக!

## மற்றவர்களுக்கு இரங்கி உதவி செய்ய வேண்டும்:

நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணிணார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஒரு இராஜாவிடம்பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவன் அந்தக் கடனைத் தீர்க்க முடியாத நிலையில் இராஜாவைத் தாழ விழுந்து வணங்கி அவனிடத்தில் கடனைக் கொடுத்து தீர்க்குமட்டும் பொறுமையாயிருக்கும்படி வேண்டினான் அந்த இராஜவோ மனதிரங்கி அவனை விடுதலை பண்ணி கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.

அப்படியிருக்க அந்த ஊழியக்காரனோ அவனிடம் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்ட தன் உடன் வேலைக்காரனில் ஒருவனை மன்னிக்காமல் அவனை பிடித்து நெரித்து கடனைக் கொடுத்து தீர்க்கும்படி பலவந்தம் பண்ணினான் அந்த ஊழியக்காரனோ அவன் காலில் விழுந்து கடனைக் கொடுத்துத் தீர்க்கும் வரை



பூர்கி பணித்தள கிறிஸ்துமஸ் கால நிகழ்வுகள்

பொறுமையாய் இருக்கும்படி வேண்டிக் கொண்டான். அவனோ சம்மதியாமல் அவனைக் காவலில் போட்டான் இதனை அறிந்த இராஜா அந்தஊழியக்காரனை அவன் கடன் கடடித்தீருமட்டும் அவனை உபாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தார் என்று வேத்தில் பார்க்கிறோம் நாம் சேவிக்கும் தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராயிருக்கிறார் நம்முடைய கிரியைகளினாலல்ல அவருடைய இரக்கத்தினாலே நம்மை இரட்சித்தார் அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள் ஆகையால் பிதாஇரக்கமுள்ளவராயிருக்கிறது போல நாமும் இரக்கமுள்ளவர்களாயிருக்க அழைக்கப்படுகின்றோம்.

## தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக நடக்க வேண்டும்:

என் நாமம் தரிக்கப்பட் என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தை தேடி தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால் அவர்கள் பாவத்தை மன்னித்து தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன் என்று தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார் வேதம் சொல்லுகிறது தன்னைத்தான் தாழ்துகிறவன் உயர்த்தப்படுவான் மேன்மைக்கு முன்னானது தாழ்மை தாழ்மைக்கும் கர்த்தருக்கு பயப்படுதலுக்கும் வரும் பலன் மகிமையும் ஜீவனுமாம்- நீதி 22:4

தாழ்மையுள்ளவர்களை நோக்கி பார்க்கும் தேவன் நம் தேவன் இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி ஆலயத்திற்குச் சென்றார்கள் ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன் பரிசேயன் இந்த ஆயக்காரனைப் போல இல்லாததினால் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் என்று பெருமையாகச் சொன்னான் ஆயக்காரனோ வானத்துக்கு நேரே தன் கண்களை ஏறேடுக்கத் துணியாமல் தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாய் இரும் என்று வேண்டினான் இவனே நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டிற்குத் திரும்பிப் போனான் என்று வேதம் நமக்கு தெளிவான எடுத்துரைக்கிறது. ஏனெனில் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான். தேவன் நம்மால் செய்ய முடியாத காரியங்களை நமக்கு கற்றுக் கொடுப்பதுமில்லை நம்மிடத்தில் எதிர் பார்ப்பதுமில்லை எல்லாவற்றிற்கும் வாழ்ந்து காட்டி மாதிரியை வைத்துப் போனார் இயேசு.

இயேசுவும் சீஷர்களும் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில் போஜனத்தை விட்டெழுந்து தணிணீரினால் சீஷர்களுடைய கால்களைக் கழுவவும் தாம் கட்டியிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் கழுவின பின்பு நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்றார். அப்படிப்பட்ட கிருபைகளைத் தேவன் நமக்கு இந்த புது வருடத்தில் தந்து நம்மை வழி



## பெத்தேல்

மகாராஷ்டரா மாநிலத்திலே பாந்தர்கவுடா மாவட்டத்திலே பிம்பிரி என்கிறதான மலைக் கிராமத்திலே நாம் தேவாலயம் கட்டி வருகிறதை நீங்கள் நன்கு அறிவீர்கள் நமது ஊழியர் சகோ. டிக்சன் குடும்பமாக அங்கு நான்கு சுதேச ஊழியர்களுடன் இணைந்து பாந்தகர்கவுடா மாவட்டத்திலே தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்.

கடந்த மாதத்திலே தேவாலய பணிகள் நிறைவடைந்து அதனை தேவ நாம்ம மகிமைக்காக பிரதிஷ்டை பண்ண தேவன் கிருபைச் செய்தார்.

டிசம்பர் மாதம் 19-ஆம் தேதி நமது ஊழியர்கள் சகோ. செல்வக்குமார் மற்றும் சகோ. அமிர்தராஜ் அவர்கள் முன்னிலையில் 250-க்கும்

மேற்பட்ட விசுவாசிகள் தேவாலய பிரதிஷ்டையில் பங்கு பெற்றனர். பிரதிஷ்டை ஆராதனை பரிசுத்த திருவிருந்து ஆராதனையாக ஆசரிக்கப்பட்டது. ஆராதனைக்குப் பின் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பங்கு பெற்ற அனைவருக்கும் நமது ஊழியர்கள் சிறப்பு உணவு ஆயத்தம் செய்து இருந்தனர். பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. இந்த ஆலய கட்டுமானத்துக்காக அநேகர் உங்களுடைய ஜெபத்தினாலும் உதாரத்துவமான காணிக்கையினாலும் தாங்கினீர்கள். தேவன் தாமே ஜெபித்த கொடுத்த உங்கள் அனைவரையும் இடங்கொள்ளாமல் போகுமட்டும் வானத்தின் பலகணிகளைத் திறந்து ஆசீர்வதிப்பாராக.

இந்த தேவாலயத்தை மையமாக வைத்து நமது ஊழியர் சகோ. டிக்சன் குடும்பத்தினர் மற்றும் நான்கு ஊழியர்களும் நமது ஊழியத்தின் தரிசனமான 100 விசுவாசக் குடும்பங்களை தேவனுக்காக ஆதாயப்படுத்துகிற பணியிலே ஈடுபட்டு வருகின்றனர். வருகிற வருடத்திலே தேவன் அவர்களுக்கு நல்ல சுகத்தையும் பெலத்தையும் ஊழியத்திற்கு நல்ல திறந்த வாசலை தந்து தேவாலயம் நிறம்பாத்தக்க அளவு ஆத்தும அறுவடையை தரும்படி ஜெபியுங்கள்.

அநேக இன்னல்கள் மத்தியிலும் தேவன் இந்த பெத்தேலை அவருடைய நாம மகிமைக்காக கட்டி முடிக்க ஏற்ற நேரங்களில் எதிர் பாராத இடங்களில் இருந்து உதவி ஒத்தாசைகளை கொடுத்ததற்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள்.









பிம்பிரி தேவாலய பிரதிஷ்டை நிகழ்வுகள்





## வியாராவில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற சிறுவர்களில் சிலர்



# பணித்தள பகிர்வுகள்

கர்த்தரின் பெரிதான கிருபையாலே நமது பூர்கி பாந்தகர்கவுடா மற்றும் வியாரா பணித்தளங்களிலே டிசம்பர் மாதத்திலே அனைத்து நிகழ்ச்சிகளும் எந்த ஒரு அசம்பாவிதமும் இன்றி நடந்து முடிந்தது. இந்த கொடிய நோய் பரவி வருகிற காரணத்தினால் அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்ட நாட்களிலே நிகழ்ச்சிகள் அனைத்தும் நடத்தி முடிக்கப்பட்டது.

நிகழ்ச்சிகளிலே புதிதாக அநேகர் குடும்பமாக கலந்துக் கொண்டு தேவனுடைய பிறப்பின் நற்செய்தியை கேட்டு சென்றிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் கேட்ட சுவிசேஷத்திலுருந்து வழி விலகி சென்று விடாமல் இருக்க நாம் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

நமது பணித்தளங்களிலே 75 ஆதரவற்ற மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள சிறுவர்களுக்கு புதுத் துணிகளை வாங்கிக் கொடுக்கவும் 45 விதவைகளுக்கு புடவைகளையும் 50 ஆதரவற்ற முதியவர்களுக்கு கம்பளிகளையும் 600 சிறுவர்களுக்கு கிற்ஸ்துமஸ் பரிசுகளை வழங்கவும் தேவன் கிருபைச் செய்தார்.

இந்த கிறிஸ்துமஸ் காலங்களிலே எங்களுக்கு அநேகர் தங்கள் ஜெபத்தினாலும் உதாரத்துவமான காணிக்கையினாலும் தாங்கினார்கள். தேவன் தாமே அவர்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!



கிறிஸ்துமஸ் கால வெகுமதி (புத்தாடைகள்) பெற்றுக் கொண்ட சிறுவர்களில் சிலர்

# ஜெபவிண்ணப்பங்கள்

- நமது பூர்கி பணித்தளத்தில் அர்ஜீன் என்ற வாலிபன் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய ஆர்வம் காட்டி வருகிறார். இவருக்கு சரியான வழிகாட்டுதல் கிடைக்கவும் சிறந்த பயிற்சி கிடைக்கவும் இவரைப் போன்று இன்னும் அநேகர் சுதேச ஊழியர்களாக எழும்பவும் அதின் மூலமாக சந்திக்கப்படாத அநேக கிராமங்களுக்கு சுவிசேஷம் எடுத்துச் செல்லப்படவும் ஜெபியுங்கள்
- நமது பூர்கி பணித்தளத்தில் கட்டப்பட்டு வரும் மிஷனரி இல்லத்தை நாம் வருகின்ற மாதத்திலே நிறைவுச்செய்ய திட்டமிட்டிருக்கின்றோம். ஆதற்கான தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் நல்ல காலசூழ் நிலை அமையவும் ஜெபியுங்கள்
- பூர்கி சபைக்கு தேவன் கடந்த வருடத்தில் 5 புதிய குடும்கங்களை நிரந்திர விசுவாசிகளாக கொடுத்துள்ளார். அவர்கள் மூலமாக ஒரு எழுப்புதல் அந்த கிராமத்திலே ஏற்படவும் இன்னும் அநேகர் தேவனை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளவும் ஜெபியுங்கள்.

சிறுவர் கூடுகை வேதாகம கதை நேரம்



கிறிஸ்துமஸ் ஆராதனையிலே பங்கு பெற்றவர்கள்
இடம்: வியாரா குஜராத்



# ஜெபவிண்ணப்பங்கள்

- பாந்தர்கவுடா பணித்தளத்தில் மனிஷா வயது 28 என்ற சகோதரிக்கு வாயில் அநேக கொப்பளங்கள் உள்ளன. கர்த்தர் அவற்றில் இருந்து அவருக்கு நல்ல சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

- பாந்தர்கவுடா பணித்தளத்தில் விக்ரம் சாலிக் மற்றும் நீலா என்பவர்கள் குடி மற்றும் பான்பராக் போன்ற போதை வஸ்துகளின் படியில் இருந்து விடுபடவும் இவர்களை போன்று போதை வஸ்துகளின் பிடியில் இருக்கிற அநேகர் அந்த பாவ பழக்கத்தில் இருந்து விடுபட்டு கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்று கொள்ள ஜெபியுங்கள்.

- பாந்தர்கவுடா பணித்தளத்தில் கொவ்காரா கிராமத்தைச் சேர்ந்த சந்தா பாயி என்ற சகோதரி நீண்ட நாட்களாக படுத்த படுக்கையாக இருந்தார்கள் நமது ஊழியர் சகோ டிக்சன் அவர்கள் அவர்கள் வீட்டிற்கு சென்று ஜெபம் நடத்த ஆரம்பித்து மூன்றாவது பாடல் பாடுகின்ற சமயத்தில் அவர்கள் எழும்பி உட்கார தேவன் அற்புத பெலன் கொடுத்தார். அந்த சகோதரிக்கு முழு சுகம் கிடைக்கவும் அவர்கள் குடும்பம் முழுவதும் தேவனை அறிந்துக் கொள்ள ஜெபியுங்கள்.

- பாந்தர்கவுடா பணித்தளத்தில் சாய்கேடா கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் என்ற வாலிபன் கடந்த நாட்களில் கொரனா நோயினால் பாதிக்கப்பட்டு மரிக்கும் தருவாயில் மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் நமது ஊழியர்கள் சென்று ஜெபித்து வந்தனர் தேவன் அவருக்கு அற்புத சுகம் அளித்தார். அந்த வாலிபன் நமது பிம்பிரி ஆலய கிறிஸ்துமஸ் ஆராதனையில் கலந்துக் கொண்டு சாட்சி கூறி அநேகருடைய விசுவாசத்தை பெலப்படுத்தினார். அவருக்காகவும் அவருடைய குடும்பத்துக்காகவும் ஜெபியுங்கள்.

- வியாரா பணித்தளத்தில் கோமி பேன் என்ற சகோதரி இழுப்பு வியாதியினால் மிகவும் பாடுபட்டு வருகிறார் அவருக்கு தேவன் அற்புத சுகம் தர ஜெபியுங்கள்.

- வியாரா பணித்தள சுதேச ஊழியர் சகோ. சுனில் அவர்களுடைய மனைவிக்கு இரண்டு கண்களிலும் சிகிச்சை ஆரம்பித்து நடந்து வருகிறது. அவர்களுக்கு நல்ல மருத்துவ உதவி கிடைக்கவும் தேவன் அவர்களுக்கு அற்புத சுகம் தரவும் ஜெபியுங்கள். மேலும் குடும்பமாக அவர்கள் செய்யும் ஊழியத்தில் தேவன் நல்ல அறுவடையை தரவும் ஜெபியுங்கள்.

**பிம்பிரி தேவாலய பிரதிஷ்டை - ஆராதனை வேளை**



# ஜெபவிண்ணப்பங்கள்

- திருநெல்வேலி மாவட்டம் பத்மநாதபுரத்தைச் சேர்ந்த சகோதரி டெய்சிராணி கணவனை இழந்து மிகவும் வேதனையில் தவித்து வருகிறார்கள் வேலைக்குச் செல்ல முடியாதபடி சரீரத்திலே சுகவீனபட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு தேவன் ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுத்து மீண்டும் வேலைக்குச் செல்ல நல்ல பெலத்தை தரும்படி ஜெபியுங்கள்

- கடந்த நாட்களில் நமது திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்கள் ஊழியத்திற்காக கடந்து சென்ற திருச்சபைகளிலும் நமது ஊழியத்தை தாங்குகிற குடும்பங்களிலும் குழந்தை பாக்கியத்திற்காக அநேகர் காத்து இருக்கிறதை கேள்விப்பட்டோம் மிகுந்த வேதனையோடு அவர்கள் இருக்கிறதையும் அறிந்தோம் அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு தேவன் இறங்கி குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து வீட்டில் சந்தோஷமும் சமாதானமும் மலர ஜெபியுங்கள்.

- கடந்த ஆண்டு முழுவதும் தேவன் நமது ஊழியர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் சுகத்தோடு பெலத்தோடு பாதுகாத்து வழிநடத்தி வந்தார் அதற்காக தேவனை ஸ்தோதரித்து இந்த வருடமும் அதே போல ஊழியத்தின் பாதையிலே தேவன் வழி நடத்தவும் இன்னும் அநேகரை கிறிஸ்துவின் மந்தைக்கு நேராய் வழிநடத்தவும் ஊழியத்தின் எல்லைகளை விரிவாக்கவும் நமது ஊழியத்தின் தரிசனத்தை அடையும் பணியில் புது பெலத்தோடு புது கிருபையோடு ஓட ஜெபியுங்கள்.

- கடந்த வருடைத்ப்போல தேவன் ஊழியத்தின் தேவைகளை வருகிற வருடத்திலும் எந்தவொரு குறைவுமில்லாமல் சந்திக்க ஜெபியுங்கள். அதன் மூலமாக சுவிசேஷம் இன்னும் அநேக புதிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படவும் ஜெபியுங்கள்.

அன்பரின் பணியில்,

**Dr. G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**

இந்த மிஷனெரி ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள எங்கள் வங்கி கணக்கில் ECS மூலம் பணம் அனுப்பி உதவலாம்.

**CANARA BANK, VANNARPETTAI BRANCH, TIRUNELVELI**
**A/C NAME: WESTERN INDIA MISSION**
**A/CNO: 2952101007959**
**IFSCCODE: CNRB0002952**

(பணம் அனுப்பப்பட்ட விபரத்தையும், M.O மூலம் பணம் அனுப்பி ஊழியங்களுக்கு உதவிசெய்வோரும் 9944306154 என்ற செல்போனுக்கு SMS மூலம் தெரியப்படுத்தினால் உங்களுக்கு ஒப்புகை ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:


| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. அமிர்தராஜ் | 7666982484 |
| சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 | சகோ. கோயில்பிள்ளை | 9159827209 |

இணையதள முகவரி : https://westernindiamission.com

*Tirunelveli Office:*
*Western India Mission,*
*C-98, East Rahmath Nagar,*
*Tirunelveli 627 011.*

*North Tamilnadu:*
*Bro. Amirdharaj*
*No: C13, Yadhavar Street,*
*Annai Theresa Nagar,*
*Ambaseshipuram, Mosur,*
*Arakkonam ,Ranipet 631004*


**DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 0462 - 2573182**